TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity

No. 5/1, Elibank Road, Colombo 05, Sri Lanka
Tele : (94) 11 4369781, 11 4369782, 11 4369783
Fax : (94) 11 2 501 707
Email : tisl@tisrilanka.org
Web: www.tisrilanka.org

23 ஏப்ரல் 2020

திரு. மஹிந்த தேசப்பிரிய
தலைவர், இலங்கை தேர்தல்கள் ஆணைக்குழு,
த.பெ.இல: 02
சரண மாவத்தை,
ராஜகிரிய
10107.

மஹிந்த தேசப்பிரிய அவர்களுக்கு,

**வரவிருக்கும் பொதுத்தேர்தலில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பாக**

ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா நிறுவனமானது தேர்தல் காலங்களில் அரச பொதுச் சொத்துக்களின் துஷ்பிரயோகம் தொடர்பாக கண்காணிக்கும் நிறுவனம் என்ற வகையில், இவ்வாறான பேரிடர் காலத்தில் தேர்தல் ஆணைக்குழுவானது கடினமானதொரு முடிவினை எடுக்கவேண்டியுள்ளதென்பதை புரிந்துகொள்ள முடிகிறது. இது மக்களின் பொதுப் பாதுகாப்பு, தேர்தல் அதிகாரிகளின் பாதுகாப்பு மற்றும் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலின் அவசியத்தைப் பிரதிபலிப்பதாகும்.

இத்தருணத்தில் நாம் அத்தியாவசிய நிவாரணப் பணிகளின் அவசியம் குறித்து அறியும் அதேநேரம், தேர்தல் பிரச்சாரங்களின் போது பொதுச் சொத்துக்களின் துஷ்பிரயோகம் என்பது இலங்கையில் நீண்கால சவாலாக உள்ளது என்பதையும் நாம் அறிவோம். தேர்தல் பிரச்சார காலத்தின் போது நிவாரணப் பணிகள் நடைபெறுவதால், பொதுச் சொத்துக்களின் துஷ்பிரயோகம் தொடர்பில் 2020 மார்ச் மாதம் 3ம் திகதி வெளியிடப்பட்ட தற்போதைய சுற்றறிக்கை (2020/03) இந்நேரத்தில் போதுமானதல்ல என நாம் நம்புகின்றோம். அந்தச் சுற்றறிக்கையானது 2020 ஏப்ரல் மாதம் 25ம் திகதியையே தேர்தல் தினமாக குறிப்பிடுவதோடு, இது கோவிற் 19 தொற்றுநோய் அதன் தாக்கத்திற்கு முன்னராக காலமாகும்.

இதனால், பொதுச் சொத்துக்களின் துஷ்பிரயோகம் தொடர்பான சுற்றறிக்கையை புதுப்பிப்பதை பரிசீலனை செய்ய வேண்டும் என்பதோடு, தற்போதைய நிவாரண சூழ்நிலைக்குப் பொருந்தும் வகையில் குறிப்பான விதிமுறைகளையும் அவை உள்ளடக்கியிருக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் ஆணைக்குழு கவனம் செலுத்த வேண்டும். இதனூடாக பொதுச்சொத்துக்களின் துஷ்பிரயோகம் மற்றும் நிவாரண சேவைகள் ஆகியவற்றை வேறுபடுத்தி அறிய உதவும். தேர்தல் பிரச்சார காலத்தின் போது தவிர்க்கமுடியாத நிவாரணப் பணிகள் திறமையாக செயற்படுவதற்கு இந்த வேறுபாடுகள் வரையறுக்கப்பட்டிருப்பது முக்கியமானதாகும். பயணக் கட்டுப்பாடுகள் எதிர்வரும் தேர்தலில் தேர்தல் கண்காணிப்பாளர்களின் செயற்பாடுகளில் தவிர்க்கமுடியாத பாதிப்பை ஏற்படுத்தும் என்பதோடு, தேர்தல் கண்காணிப்பாளர்கள், தேர்தல் சட்டத்தை மீறக்கூடிய பிரிவினரை தடுப்பதற்கான வாய்ப்புக்களையும் அது கணிசமானளவு குறைக்கும். இதனால், பொது மக்களும் அரச ஊழியர்களும் முன்னரை விட விழிப்புடன் இருப்பதை உறுதிசெய்வதற்கு சுற்றறிக்கை புதுப்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை மேலும் வலுப்படுத்துகின்றது.

பொதுச் சொத்துக்களின் துஷ்பிரயோகத்தை கண்காணிக்கும் எமது பணிக்கு அப்பால், தேர்தல் அறிவிக்கப்பட்ட திகதியானது (2020 ஜுன் 20) புதிய பாராளுமன்றம் கூடுவதற்கான அரசியலமைப்பில் வழங்கப்பட்டுள்ள (Art. 70(05) காலக்கெடுவுக்கு முரணானது என்பதும் எமது கருத்தாகும். இது தேர்தலின் சட்டரீதியான நியாயத்தன்மையையும் அதன் முடிவுகளையும் கேள்விக்குள்ளாக்குவதாக அமையும்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை உறுதி செய்வதற்காக மேற்குறித்த விடயங்களை கருத்திற்கொள்வீர்களென நம்புகின்றோம்.

இப்படிக்கு,

உண்மையுள்ள,

எஸ்.சீ. அசோக்க ஒபேசேக்கர
நிறைவேற்றுப் பணிப்பாளர்

பிரதிகள்: 1. நளின் அபேசேக்கர, தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்

2. பேராசிரியர், ரத்ணஜீவன் ஹுல், தேர்தல் ஆணைக்குழுவின் உறுப்பினர்

Reg No. GA 279 Chairperson: S.C.C. Elankovan Company Secretary: Charuni Gunawardana
Directors: Anushika Amarasinghe, Shyamala Gomez, Camena Guneratne, Pavithra Kailasapathy, Shreen Saroor, T. Someswaran, Tony Senewiratne, Pulasthi Hewamanna